**வாக்குமூலம்**

**நீதிமன்றம் இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, இராணிப்பேட்டை.**

**வழக்கு எண். SC 69/2020**

**வழக்கு சாட்சி PW 12**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பி.தாசன் | ஜாதி | : | SC |
| தந்தை பெயர் | : | பூபாலன் | தொழில் | : | SI of Police |
| கிராமம் | : | அரப்பாக்கம் | சமயம் | : | Hindu |
| தாலுக்கா | : | வாலாஜா | வயது | : | 57 |

**(எதிரி ஆஜர்)**

**தேதி 31.01.2024**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராணிப்பேட்டை மாவட்டம் நெடுஞ்சாலை ரோந்து கண்காணிப்பு பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.09.2019ம் தேதி காலை 10 மணியளவில் இராணிப்பேட்டை காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது சேவூர் சத்தியாபுரம் கிராமத்தை சேர்ந்த கண்ணன் த/பெ.எல்லப்பன் என்பவரை நிலையம் சேர்ந்து கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண். 576/2019 குவிமுச பிரிவு 174 (3) படி வழக்கு பதிவு செய்து புலன் விசாரணைக்காக இராணிப்பேட்டை கோட்டாட்சியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.9** ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மேற்படி முதல் தகவல் அறிக்கையை இராணிப்பேட்டை கோட்டாட்சியர் அவர்களிடம் பதிவு செய்த காலை 10 மணிக்கு சேர்த்துவிட்டேன். என்னை விசாரித்து ஆய்வாளர் வாக்குமூலம் பதிவு செய்தார். ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை என்றும் விசாரித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் கண்ணன் எழுத்து மூலமாக புகார் கொடுத்தார். அ.சா.ஆ.1 புகாரை யார் எழுதினார் என்று எனக்கு தெரியாது. அ.சா.ஆ.1 புகாரில் நான் செய்துள்ள மேற்குறிப்பில் திருத்தம் உள்ளது. அ.சா.ஆ.1 புகாரில் 2வது பக்கத்தில் மேலிருந்து கீழாக 5வது வரியில் இறந்துகிடந்ததாக என்று

குறிப்பிட்டுள்ளதில் திருத்தம் உள்ளது என்றால் சரிதான். அந்த திருத்தத்தில் எந்த விதமான சுருக்கொப்பமும் செய்யப்படவில்லை. முதல் தகவல் அறிக்கையை நான் கணினி தட்டச்சு செய்யவில்லை. கையொப்பம் மட்டும் தான் செய்தேன். முதல் தகவல் அறிக்கையை யார் கணினியில் தட்டச்சு செய்தார் என்று குறிப்பு, பெயர் மற்றும் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். புகாரில் என்ன சங்கதிகள் குறிப்பிடப்பட்டுள்ளதோ அதனடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவேண்டும். அ.சா.ஆ.1 புகாரில் இறந்த இடத்தில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது முதல் தகவல் அறிக்கையில் இறந்து கிடந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காவல் துறையினரால் கண்ணனிடம் உண்மைக்கு புறம்பாக எழுதி வாங்கப்பட்ட புகார் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு காலை 11 மணிக்கு சென்றேன். அ.சா.1 புகார் கொடுக்கும் போது யார் உடன் இருந்தார்கள் என்று ஞாபகம் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு காலை 11 மணிக்கு துணைக்கண்காணிப்பாளர் இராணிப்பேட்டை அவர்களுடன் சென்றேன். நான் பிரேத விசாரணை செய்வதற்கு சார் ஆட்சியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். மேற்படி ஆவணங்களை தவிர இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எந்த ஆவணங்களும் தயார் செய்யவில்லை.

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH